இன்றைய செய்தி நாளைய வரலாறு



# முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

திங்கள்கிழமை 16-12-2024

# ஒற்றைச் சர்வாதிகாரச் சட்டமாகும்

ஒரே நாடு - ஒரே தேர்தல் மசோதாவுக்கு ஒன்றிய அமைச்சரவை ஒப்புதல் தந்திருப்பது - இந்தியாவை ஒற்றைச் சர்வாதிகார நாடாக மாற்றும் முயற்சிகளின் வடிவம் ஆகும்.

**இது குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் வெளியிட்ட அறிக்கையில், கொடுங்கோன்மைக்கு இது வழிவகுக்கும் என்றும், நடைமுறைக்கு ஒவ்வாதது என்றும், மக்களாட்சிக்கு எதிரானது என்றும், மாநிலங்களின் குரலை அழித்துவிடும் என்றும், கூட்டாட்சியை சிதைத்துவிடும் என்றும், ஆட்சி நிர்வாகத்துக்கு தடையை ஏற்படுத்தும் என்றும் கூறியிருக்கிறார். இந்திய ஜனநாயகத்தின் மீது நடத்தப்படும் தாக்குதல் என்று அவர் சொல்லி இருப்பதுதான் முழு உண்மையாகும்.**

மக்களவைத் தேர்தல் - மாநிலங்களின் சட்டசபைத் தேர்தல் ஆகியவற்றை ஒரே நேரத்தில் நடத்த வேண்டும் என்று நினைக்கிறது பா.ஜ.க.. அப்படி நடத்தினால், மக்களவை தேர்தல் மனோபாவத்தில் அனைத்து மாநிலங்களிலும் மக்கள் வாக்களிப்பார்கள் என்று நப்பாசைப்படுகிறது பா.ஜ.க.. இரண்டு வெவ்வேறு மனநிலைகளில் மக்கள் வாக்களிப்பதால் தான் மாநில அரசுகளைக் கைப்பற்ற முடியவில்லை என்று நினைக்கிறது பா.ஜ.க.. அதற்காகக் கொண்டு வரப்போகும் சட்டம்தான் ஒரே நாடு - ஒரே தேர்தல் சட்டமாகும்.

இதற்காக இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் 129 ஆவது திருத்தத்தைக் கொண்டு வரப் போகிறார்கள். இந்தச் சட்டத்துக்கு கடந்த 12 ஆம் தேதி அன்று ஒன்றிய அமைச்சரவை ஒப்புதல் வழங்கி இருக்கிறது.

ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவது என்ற முடிவை எடுத்து அதற்கு ஒப்புதல் வழங்குவதற்காக ஒரு கண்துடைப்பு குழுவை பா.ஜ.க. அரசு அமைத்தது. முன்னாள் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் இதன் தலைவராக இருந்தார். இவர்கள் சொன்னதை அப்படியே அவர் எழுதி வழங்கினார். மக்களவைக்கும், மாநில அரசுகளுக்கும் ஒரே நேரத்தில் தேர்தல் நடத்தலாம் என்று இக்குழு சொன்னது. தொங்கு மக்களவை வந்தாலோ, அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் வெற்றி பெற்றாலோ மீதமுள்ள மக்களவையின் பதவிக் காலத்துக்கு புதிய தேர்தலை நடத்தலாம் என்றும் இக்குழு சொல்லி இருக்கிறது. அப்போது மட்டும் தனியாகத் தேர்தலை எதற்காக நடத்த வேண்டும்? அனைத்து மாநில அரசுகளையும் கலைத்து விட்டுத் தேர்தல் நடத்த வேண்டியது தானே?

ஒரே நேரத்தில் மக்களவை - மாநில அரசுகளுக்கு தேர்தல் வைத்தால் பல மாநில அரசுகளை முன்கூட்டியே கலைக்க வேண்டி வரும். சில மாநில அரசுகளை கூடுதல் காலம் ஆள அனுமதிக்க வேண்டி வரும். இதுவே அரசியலமைப்புச் சட்டத்தால் மக்களுக்கு வழங்கப்பட்ட ஜனநாயக உரிமையை தங்களது வசதிக்காக வளைக்கும் காரியம் ஆகும். அதனையும் இந்தச் சட்டம் செய்கிறது.

**பா.ஜ.க.வில் கவிழ்ப்பு - உடைப்பு - இழுப்பு அரசியலால் பல மாநிலங்களில் குழப்பம் ஏற்பட்டு ஆட்சிகள் மாறுகிறது. அப்போதெல்லாம் மக்களவையைக் கலைத்து பதவி விலக பிரதமராக இருப்பவர் தயாராக இருக்கிறாரா? இருப்பாரா? ஒரே வீட்டில் இருக்கும் அண்ணன் - அக்கா - தம்பி - தங்கை நால்வருக்கும் ஒரே நேரத்தில் தான் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று சொல்லும் கேலிக்கூத்து அல்லவா இது?**

இப்படி ஒரு விநோதமான - 'செருப்புக்கு ஏற்ப காலைச் செதுக்கிக் கொள்ளும்' - பரிந்துரையை அக்குழு சொன்னது. ராம்நாத் கோவிந்த் தலைமையிலான குழுவின் பரிந்துரைகளை பா.ஜ.க. அரசு கடந்த செப்டம்பர் 18 ஆம் நாள் ஏற்றுக் கொண்டது. இதற்கான சட்டத்திருத்த மசோதா தயார் ஆனது. அந்த மசோதாவை ஒன்றிய அமைச்சரவை ஏற்றுக் கொண்டு விட்டது. மக்களவையில் வைக்கப் போகிறார்கள்.

மக்களவை - மாநில சட்டப்பேரவைகளின் பதவிக் காலத்தை ஒரே நேரத்தில் நிறைவு செய்வது தொடர்பாக அரசியலமைப்புச் சட்டப் பிரிவு 82 ஏ - இல் புதிதாக துணைப்பிரிவு 2 சேர்க்கப்படுகிறது. மக்களவை, மாநில சட்டப் பேரவைகளைக் கலைப்பது தொடர்பாக சட்டப்பிரிவு 83 (2) வில் புதிதாக 3,4 ஆகிய துணைப் பிரிவுகளைச் சேர்க்கப் போகிறார்கள். ஒரே நேரத்தில் இரு தேர்தல்களையும் நடத்துவது தொடர்பாக சட்டப் பிரிவு 327 இல் திருத்தம் கொண்டு வரப் போகிறார்கள். யூனியன் பிரதேசங்களில் தேர்தல் நடத்துவது தொடர்பாக தனியாக சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட உள்ளது.

ராம்நாத் கோவிந்த் குழுவின் அறிக்கையில், மக்களவை - மாநில சட்டப் பேரவைத் தேர்தல்கள் முடிந்து 100 நாட்களுக்குள் உள்ளாட்சி அமைப்புகளின் தேர்தல் நடத்த வேண்டும் என்று இருக்கிறது. இதனை ஏற்று சட்டம் செய்வதாக இருந்தால் 50 விழுக்காடு மாநில அரசுகளின் ஒப்புதல் தேவை. அது கிடைக்காது என்பதால் அதனைத் தள்ளி வைத்து விட்டார்கள்.

இம்மசோதாக்கள் நிறைவேற மக்களவையில் மூன்றில் இரண்டு பங்கு எம்.பி.களின் ஆதரவு தேவை. அது பா.ஜ.க.வுக்கு இல்லை. அதாவது 361 எம்.பி.களின் ஆதரவு தேவை. பா.ஜ.க. கூட்டணிக்கு 293 எம்.பிக்களின் ஆதரவே இருக்கிறது. 'இந்தியா' கூட்டணிக் கட்சிகளுக்கு 235 எம்.பிக்கள் இருக்கிறார்கள். மாநிலங்களவையில் 243 எம்.பி.களில் 122 எம்.பி.கள் ஆதரவுதான் பா.ஜ.க. கூட்டணிக்கு இருக்கிறது.

முன்னாள் தேர்தல் அதிகாரி குரேஷி சொன்னதை நினைவூட்ட விரும்புகிறோம். **"ஒரே நாடு - ஒரே தேர்தல் என்று இப்போது சொல்பவர்கள் 'ஒரே நாடு - ஒரே கட்சி ஏன் கூடாது?' என்று நாளை கேட்கலாம். பிறகு, 'ஒரே நாடு - ஒரே தலைவர் ஏன் கூடாது?' என்றும் சொல்லலாம். அவ்வாறு கிளம்பினால் அதற்கு முடிவே இல்லை. பா.ஜ.க.வின் தேசியவாதம் எங்கே போய் முடியும்?"** என்று கேட்டார் குரேஷி.

ஒற்றைத் தனி மனிதனின் கையில் நாட்டைக் கொண்டு போய்ச் சேர்க்கும். இந்த ஆபத்து 'பா.ஜ.க.வையும் சேர்த்துத் தான்' விழுங்கும் என்பதை மறந்து விடாதீர்கள்!

## தமிழ்நாட்டிற்கு ஆரஞ்சு அலர்ட்!

சென்னை, டிச. 16 –

தமிழ்நாட்டிற்கு 2 நாட்கள் ஆரஞ்சு அலர்ட் விடுக்கப்பட்டுள்ளது. தெற்கு அந்தமான் கடல் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதன் காரணமாக இன்று தென்கிழக்கு வங்கக்கடல் பகுதிகளில் ஒரு காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகக்கூடும்.

இது மேலும் வலுப்பெற்று, மேற்கு வடமேற்கு திசையில், தமிழக கடலோரப் பகுதிகளை நோக்கி அதற்கடுத்த இரு தினங்களில் நகரக் கூடும். இதன் காரணமாக தமிழ்நாட்டில் 17,18 ஆகிய தேதிகளில் ஓரிரு இடங்களில் மிக கனமழைக்கு வாய்ப்பு உள்ளது என இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

12 முதல் 20 செமீ வரை மழைபொழிவிற்கு வாய்ப்பு என்பதால் டிச.17,18 ஆகிய 2 நாட்கள் ஆரஞ்சு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது, தமிழ்நாட்டில் டிசம்பர் 16, 17, 18, 19 ஆகிய 4 நாட்கள் ஓரிரு இடங்களில் கனமழைக்கு வாய்ப்பு உள்ளது எனவும் கூறியுள்ளது.



விருதுநகர் மாவட்டம், சிவகாசி, மாஸ்டர் பிரிண்டர்ஸ் அரங்கத்தில் நடைபெற்ற 2 ஆவது கரிசல் இலக்கியத் திருவிழாவினை, மாவட்ட ஆட்சித்தலைவர் வீ.ப.ஜெயசீலன், தலைமையில், நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தொடங்கி வைத்து விழாப் பேருரையாற்றினார்கள். இந்நிகழ்வில் நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி இணைய வழியில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இந்நிகழ்வில் சாத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.ரகுராமன், சிவகாசி மாநகராட்சி மேயர் சங்கீதா இன்பம், சிவகாசி சார் ஆட்சியர் ந.ப்ரியா ரவிச்சந்திரன், சிவகாசி ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் முத்துலட்சுமி விவேகன்ராஜ், சிவகாசி ஊராட்சி ஒன்றியக் குழுத் துணைத் தலைவர் விவேகன்ராஜ் மற்றும் சாகித்ய அகாடமி விருதாளர் மற்றும் எழுத்தாளர் எஸ். ராமகிருஷ்ணன் ஆகியோர் உடன் இருந்தனர்.

### பொதுமக்களின் எதிர்ப்பை மீறி – ஐ.ஆர்.இ.எல். நிறுவனம்

# கிள்ளியூர் தொகுதியில் மணல் எடுக்க தமிழ்நாடு அரசு ஒருபோதும் அனுமதிக்காது!

## சட்டப் பேரவையில் அமைச்சர் துரைமுருகன் தகவல்!

**சென்னை, டிச. 16 -**

**சட்டப் பேரவையில் கிள்ளியூர் தொகுதி உறுப்பினர் செ.ராஜேஷ் குமார் பேசும்போது குறுக்கிட்டு பேசிய அமைச்சர் துரைமுருகன், பொது மக்களின் எதிர்ப்பை மீறி - ஐ.ஆர்.இ.எஸ்.நிறுவனம் கிள்ளியூர் தொகுதியில் மணல் எடுக்க தமிழ்நாடு அரசு ஒருபோதும் அனுமதிக்காது என்று குறிப்பிட்டார்.**

இது குறித்து சட்டப் பேரவையில் நடைபெற்ற விவாதம் வருமாறு:



**செ.ராஜேஸ்குமார்:** எனது தொகுதியில் முக்கியமான கோரிக்கையை நீர்வளத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நான் கொண்டுவருகிறேன்.

கன்னியாகுமரி மாவட்டம், கிள்ளியூர் சட்டமன்றத் தொகுதி, கிள்ளியூர் தாலுகா, கல்குளம் தாலுகா, சைமன் காலனி, கீழ்மிடாலம் A, மிடாலம் B, இரையுமன்துறை, ஏழுதேசம் A, B, C, கொல்லங்கோடு A, B வருவாய் கிராமங்கள், அதையொட்டி இரண்டு கிலோ மீட்டர் உள்நாட்டுப் பகுதியில், கிட்டத்தட்ட 1,144.6.18 ஹெக்டேர் நிலங்களில், அங்கே இருக்கின்ற கனிம வளங்களைப் பிரித்தெடுப்பதற்காக, மணல் எடுப்பதற்கு IREL மணல் கம்பெனி, அரிய வகை மணல் ஆலைக்கு, அதற்குரிய அனுமதியைக் கொடுத்ததாக, ஒன்றிய மாநில அரசுகள் இணைந்து ஒரு கருத்து கேட்புக் கூட்டத்தை பத்மநாபபுரம் சார் ஆட்சியர் அலுவலகத்தில் நவம்பர் 1 ஆம் தேதி வைத்தார்கள். ஆனால், மக்களுடைய பல்வேறு போராட்டத்தின்மூலமாக, மாவட்ட ஆட்சியர் அவர்கள் தலையிட்டு, தற்காலிகமாக அந்த கருத்துக் கேட்புக் கூட்டத்தை நிறுத்தி வைத்திருக்கிறார்கள்.

ஆனால், இவர்கள் மணல் எடுக்கக்கூடிய பகுதி, அதாவது மணல் அள்ளக்கூடிய பகுதி என்கின்ற அந்த 1,144 ஹெக்டேர் நிலப்பரப்பு, அது மக்கள் அடர்த்தியாக வாழக்கூடிய பகுதி. அங்கே அதிகமான பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன; தேவாலயங்கள் இருக்கின்றன; இந்து கோயில்கள் இருக்கின்றன; மக்களுடைய குடியிருப்புப் பகுதிகள் இருக்கின்றன. ஆகவே, அங்கு அதிகமான நிலங்கள் வெற்று நிலமாக இல்லை. ஆனால், 1,144 ஹெக்டேர் நிலப்பரப்பில் மணலை எடுத்து, அதிலிருந்து பிரித்து, வேதியியல் பொருட்களான யுரேனியம், கார்னெட், ரூட்டைல் போன்ற வேதியியல் அணும கனிமங்களை எடுப்பதாகச் சொல்லியிருக்கின்றார்கள். ஏற்கெனவே, கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்த வரையில், அதிகமாக புற்றுநோய் பாதிக்கக்கூடிய மாவட்டமாக உள்ளது.

எனவே, சுகாதாரக் கேடு மற்றும் சுற்றுச்சூழல் அங்கு அதிகமாகப் பாதிக்கப்படும். ஆகையால், மக்களைப் பாதிக்கக்கூடிய அந்தத் திட்டம் தொடர்பாக, உடனடியாக, மாநில அரசாங்கம் தலையிட்டு, அந்த அணுக் கனிமச் சுரங்கத்தை உடனடியாகக் கைவிடவேண்டுமென்று தங்களைக் கேட்டு அமைகிறேன்.

**அமைச்சர் துரைமுருகன்:** கடந்த 13.8.2015 அன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் கீழ்மிடா லம், மேல்மிடாலம், கல்குளம், ஏழுதேசம் மற்றும் கொல்லங்கோடு ஆகிய பகுதி கிராமங்களில் உள்ள 1,1817 ஹெக்டேர் பரப்புள்ள நிலத்தினை, மாக்னசைட் கனிம வளத்திற்காக IREL நிறுவனத்திற்கு ஒதுக்கீடு செய்ய ஒப்புதல் வழங்குமாறு, மாநில அரசை ஒன்றிய அரசு கேட்டது. 15.4.2021, அது 13.3.2015, இது 13.4.2021. இவ்வளவு நாட்கள் gapல் என்ன நடந்தது என்று நான் கேட்கவில்லை. அந்த நாளிட்ட கடிதத்தில், மேற்குறிப்பிட்ட நிலப்பரப்பை, அங்குள்ள ஒரு 29 ஏக்கர் நிலப்பரப்பை நீக்கிவிட்டு, ஒன்றிய சுரங்க அமைச்சகத்திற்கு தமிழக அரசு பரிந்துரை செய்தது. நவம்பர் 2018 அன்று இந்திய சுரங்க அமைச்சகம் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள 1,144 ஹெக்டேர் பரப்பளவை மேல்நடவடிக்கை மேற்கொள்வதற்காக IREL நிறுவ னத்திற்கு ஒதுக்கீடு செய்ய அறிவித்தது, கடந்த ஆட்சியில். அதற்குப் பிறகு நடந்ததையெல்லாம் நீங்கள் சொல்லிவிட்டீர்கள். தொடர்ந்து மக்கள் பிரச்சினை அதிகமாக இருந்தது. அதனால், District Collector அவர்கள் conference வைத்தார்கள்.

மக்கள் எழுச்சியைப் பற்றி பேசினார்கள். ஆகையினால், ஒழுங்கு பிரச்சினையைக் கருத்திற்கொண்டு, மேற்படி மாவட்ட ஆட்சியர் அதை ஒத்தி வைத்துவிட்டார். நில உரிமையாளர்களிடம் இசைவு பெற்ற பின்னர்தான், மாநில அரசால் சுரங்க குத்தகைகளை வழங்க இயலும். பொது மக்களின் எதிர்ப்பை மீறி, I.R.E.L. நிறுவனம் beach sand minerals சுரங்க நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தமிழக அரசு ஒருபோதும் அனுமதிக்காது.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

# பொங்கலுக்கு 1.75 கோடி பேருக்கு இலவச வேட்டி – சேலை!

## அமைச்சர் ஆர்.காந்தி அறிவிப்பு!

*வேலூர், டிச. 16 -*

*வேலூர் மாவட்டம் காட்பாடி தாலுகா திருவலம் அடுத்த அம்முண்டி பகுதியில் உள்ள வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் நடப்பாண்டிற்கான கரும்பு அரவை தொடக்க விழா மாவட்ட ஆட்சியர் வே.இரா.சுப்புலட்சுமி தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி கலந்து கொண்டு கரும்பு அரவையை தொடங்கி வைத்தார். சர்க்கரை ஆலை செயலாட்சியர் நர்மதா அனைவரையும் வரவேற்றார். நிகழ்ச்சியில் விவசாயிகளுக்கு தமிழக அரசால் மானிய விலையில் வழங்கப்படும் கரும்பு வெட்டும் இயந்திரம் 2023 .24 ஆண்டு அரவை பருவத்தில் அதிக அளவு கரும்பு சப்ளை செய்த 24 விவசாயிகளுக்கு பரிசுத்தொகையை அமைச்சர் ஆர்.காந்தி முன்னிலையில் வழங்கப்பட்டது.*

*பிறகு அமைச்சர் ஆர்.காந்தி பேசுகையில் கடந்த மூன்று ஆண்டுகளில் சுமார் ஒரு லட்சத்து 75 ஆயிரம் விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கப் பட்டுள்ளது.*

*தமிழக அரசு வேளாண்மை, கல்வி ,சுகாதாரம் ஆகிய மூன்று துறைகளுக்கு அதிக அளவில் நிதி ஒதுக்கீடு செய்து செயல்படுத்தி வருகிறது. வேளாண்மைக்கு தனி பட்ஜெட் தாக்கல் செய்யப்படுகிறது.*

*ஏழை எளிய மக்களுக்கு வழங்கப்படும் இலவச வேட்டி - சேலை இந்த ஆண்டு இறுதிக்குள் 90 சதவீதம் பேருக்கும், ஜனவரி மாதம் 10ந்தேதிக்குள் நூறு சதவீதம் என ஒரு கோடியே 75 லட்சம் பேருக்கு வழங்கப்படும் .*

*15 வண்ணங்களில் சேலைகளும் ஐந்து வண்ணங்களில் வேட்டிகளும் தரமானவையாகவழங்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.*



*துணி ரகங்கள் வெளி நாடுகளில் இருந்து கொள் முதல் செய்வதாக கூறப்படுவது தவறு. நூலுக்கு மட்டும்தான் டெண்டர் விடப்படுகிறது. ஆனால் அதை தயாரிப்பது கூட்டுறவு சங்கங்கள் தான் கடந்த ஆண்டு துணிரகங்களில் பாலிஸ்டரை கலப்பதாக தவறான தகவல் தெரிவித்து இருந்தனர் .*

*அதற்காக மொத்தமும் பாலிஸ்டர் கலந்திருக்கிறது என கூறுவது தவறாகும். இதனை தடுக்கும் விதமாக கண்காணிப்பு குழுக்கள் அமைக்கப்பட்டு கண்காணித்து வருகிறோம் .*

*துணி நூல் துறையை பொறுத்தவரை யார் தவறு செய்தாலும் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் .*

*நூல் விலையை தீர்மானிப்பது தமிழக அரசு இல்லை .காட்டன் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா கட்டுப்பாட்டில் தான் நூல் விலை உள்ளது.*

*சைமா எனப்படும் சவுத் இந்தியா மில் அசோசியேசன் கோரிக்கையை ஏற்று செஸ் வரியை நீக்கினோம், மில்களுக்கு மானியம் அளித்தோம், இதனால் துணியை நூல் உரிமையாளர்கள் தமிழக முதலமைச்சரை சந்திக்க உள்ளனர் மில்களில் எந்திரங்கள் புதுப்பிக்க எட்டு சதவீதம் வட்டி வங்கிகளுக்கு கட்டினால் ஆறு சதவீதம்அரசு அளிக்கிறது. நிதிநிலை எப்படி இருந்தாலும் அதனை சரியாக கையாண்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அனைத்து துறைகளுக்காகவும் சிந்தித்து செயல்படுத்துகிறார்.*

*இவ்வாறு அவர் பேசினார்.*

*நிகழ்ச்சியில் வேலூர் மாநகர செயலாளர் ப. கார்த்திகேயன் எம்.எல்.ஏ., இராணிப்பேட்டை மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஜே.எல். ஈஸ்வரப்பன் எம் .எல் .ஏ, ஒன்றிய குழு தலைவர் வேல்முருகன் , துணைத்தலைவர் சரவணன், ஒன்றிய கழக செயலாளர் தணிகாசலம் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.*



கடலூர் கிழக்கு மாவட்டம், புவனகிரி ஒன்றியம், சேத்தியாத்தோப்பு – புவனகிரி மெயின் ரோட்டில் மிராளூர் கிளைக் கழகச் செயலாளர் ஜி .சேதுராமன் பிள்ளை எம் .ஜி .எஸ். பெட்ரோல் பங்க் நிலையத்தை அமைச்சர் எம் .ஆர். கே. பன்னீர்செல்வம் திறந்து வைத்து,வாகனங்களுக்கு பெட்ரோல் விநியோகித்து துவக்கிவைத்தார். இந்த நிகழ்வில் மாவட்டக் கழகப் பொருளாளர் எம்.ஆர்.கே.பி.கதிரவன், முன்னாள் எம்.எல்.ஏ,துரை.கி.சரவணன், புவனகிரி மேற்கு ஒன்றிய கழக செயலாளர் ஏ.எஸ். மதியழகன், கம்மாபுரம் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் கே.ஆர்.ராயர், சேத்தியாதோப்பு பேரூர் கழக செயலாளர் வழக்கறிஞர் பழனி.மனோகரன் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ஏ.எம். மதியழகன் தமிழ்நாடு வணிகர் நல வாரிய உறுப்பினர் எஸ் .கே. கருணாநிதி, மாவட்டக் கழக பிரதிநிதி துரை மணிராஜன், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் ஏ.ஜெகன், எம்.ஆர்.கே., கூட்டுறவு சர்க்கரை ஆலை தொ.மு.ச தலைவர் க.இராஜாராமன், ஊராட்சி மன்ற தலைவர்கள் சாரங்கபாணி, மோகன், உள்ளிட்ட, மாவட்ட ஒன்றிய நகர பேரழக நிர்வாகிகள் சார்பு பணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.